<u>**கூடுதல் சார்பு நீதிமன்றம், காஞ்சிபுரம்**</u>

நாள் 11.08.2026
**அசல் வழக்கு எண். 152/2008**
**வா.சா. 1. – தேவராஜன் த/பெ.சந்திரப் பிள்ளை என்பவரை பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை**
**சாட்சி சத்தியபிரமாணம் செய்யப்பட்டார்.**

1) சந்திரப் பிள்ளையின் முதல் மனைவி பெயர் காந்தம்மாள் என்றால் சரிதான். சந்திரப்பிள்ளை மற்றும் காந்தம்மாளுக்கு 1945ல் திருமணம் ஆனது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. சந்திரப்பிள்ளையின் 2வது மனைவி பெயர் சாரதாம்மாள் என்றால் சரிதான். சாரதாம்மாள் இவ்வழக்கின் 1ம் வாதி என்றால் சரிதான். அவருக்கு 2 முதல் 4 வாதிகள் வாரிசுகள் என்றால் சரிதான். வழக்கு நடக்கும் போது சாரதாம்மாள் இறந்துவிட்டார் என்றால் சரிதான். முதல் மனைவிக்கு மோகனாம்பாள் மற்றும் புருஷோத்தமன் என்றால் சரிதான். மோகனாம்பாள் வழக்கு நடக்கும் போது இறந்துவிட்டார் என்றால் சரிதான். சந்திரசேகர் என்பவரை 3ம் பிரதிவாதியாக மோகனாம்பாள் வாரிசாக வழக்கில் சேர்க்கப்பட்டுள்ளார் என்றால் சரிதான். வழக்கு தாக்கல் செய்தபோது 4 அட்டவணை சொத்துக்கள் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். எனது பிராதில் அட்டவணை சொத்துக்கள் எவ்வாறு வாங்கப்பட்டது என்று சொல்லப்படவில்லை என்று சொன்னால் சரியல்ல. எந்த கிரையப்பத்திரம் படியாக எந்த சொத்து வாங்கப்பட்டது என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரியல்ல. எனது பிராதில் 3 கிரைய ஆவணங்கள் வாதி தரப்பு ஆவணங்களாக சொல்லப்பட்டுள்ளது என்றும், பின்னிட்டு கூடுதல் ஆவணங்களாக 13 ஆவணங்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், மேற்படி ஆவணங்கள் சம்மந்தமான விவரங்களை தனித்து குறிப்பிடவில்லை என்று சொன்னால் அது பற்றி எனக்கு ஞாபகம் இல்லை.

2) எனது தந்தை ஆசிரியராக பணி புரிந்து 1978ல் ஓய்வு பெற்றுவிட்டார் என்றால் சரிதான். 2ம் பிரதிவாதி புருஷோத்தமன் 1950ல் பிறந்துள்ளார் என்றால் சரிதான். 2ம் பிரதிவாதி ஆசிரியராக 1970ல் பணியில் சேர்ந்தார் என்றால் அது பற்றி சரியாக தெரியவில்லை. நான் 1970ம் வருடத்தில் பிறந்தேன் என்றால் சரிதான். அப்போது 2ம் பிரதிவாதி ஆசிரியராக இருந்தார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் அனைத்தும் 1978க்கு பின்னிட்டு ஏற்பட்ட ஆவணங்கள் என்று சொன்னால் சரியல்ல. எனது பிரமான வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ள ஆவணங்கள் 6,7,8,9,10 தவிர மற்ற கிரைய ஆவணங்கள்

1978க்கு பின்னிட்டு ஏற்பட்ட ஆவணங்கள் என்று சொன்னால் சரிதான். மேற்படி கிரைய ஆவணங்களானது எனது தந்தையின் வருமானம் மற்றும் விவசாய வருமானம் வைத்து எனது தந்தை பெயரில் வாங்கப்பட்டுள்ளது.
3) மேற்படி 6, 8,9,10 கிரைய ஆவணங்கள் ஏற்படுவதற்கு முன்பாக விவசாய நிலங்கள் எனது தகப்பனாரின் தகப்பனார் பெயரில் இருந்ததாக ஆவணங்கள் இல்லை என்று சொன்னால் எனது தாத்தா பொன்னபிள்ளை பெயரில் விவசாய நிலங்கள் இருந்தது. தற்போதும் அவர் பெயரில் இடங்கள் உள்ளது. எனது தாத்தாவிற்கு எனது தந்தை மட்டுமே ஆண் வாரிசு என்றால் சரிதான். பெண் வாரிசுகள் 2பேர் இருந்தார்கள். அவர்கள் இறந்துவிட்டார்கள். எனது தந்தையின் சகோதரிகள் எப்போது இறந்தார்கள் என்றால் 1992ம் வருடத்தில் இறந்ததாக ஞாபகம். எனது தாத்தாவின் இடங்கள் எந்த ஊரில் இருந்தது என்றால் வல்லத்தூர் ஆகும். தற்போது எங்கு சொத்துக்கள் உள்ளது என்றால் வல்லத்தூரில் உள்ளது. இடத்திற்கான சர்வே எண் விஸ்தீரணம் பொறுத்து ஆவணம் உள்ளதா என்றால் உள்ளது. எனது தாத்தா பெயரில் உள்ள சொத்துக்களை இவ்வழக்கில் சேர்க்கவில்லை என்றால் சரிதான். அது கூட்டு பட்டாவாக உள்ளது. எனது பிராது மற்றும் பிரமாண வாக்குமூலத்தில் தாத்தா சொத்து பற்றி குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். நான் எனது தாத்தா சொத்துக்களை வழக்கில் சேர்க்கவில்லை என்பதால் நான் கோரியுள்ள பாக உரிமை வழக்கு ஏற்புடையதல்ல என்று சொன்னால் சரியல்ல.
4) தாவா ஏ அட்டவணை சொத்தில் சர்வே எண்.242/1, 241/6பி, 241/6சி ஆகியவற்றிற்கு ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. சர்வே எண்.419/2பி -44செண்ட் பட்டா எண்.150ல் அடங்கிய சொத்து நான் எனது பெயருக்கு பாக பாத்திய அக்கு விடுதலை பத்திரம் மற்ற வாதிகளிடமிருந்து பெற்றுள்ளேன் என்று சொன்னால் சரிதான். அந்த ஆவணத்தில் மேற்படி சொத்தானது சந்திரப்பிள்ளை பெயரில் பட்டா எண்.150 என இருந்ததாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். சந்திரப்பிள்ளை 25.08.1995ல் இறந்த பிறகு வாதிகள் மட்டும்தான் வாரிசுகள் என்பதாக விடுதலை பத்திரம் 24.07.2007ல் ஏற்படுத்தப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த சமயத்தில் எங்களுக்குள் வழக்கு சொத்துக்களை பொறுத்து பாகப்பிரிவினை ஏற்படவில்லை என்று சொன்னால் சரிதான். பாகப்பிரிவினை ஏற்படாத நிலையில் பிரதிவாதிகளை ஏமாற்றும் நோக்கில் மேற்படி ஆவணம் எழுதப்பட்டுள்ளது என்று சொன்னால் மேற்படி இடத்தை வேறு நபர்களுக்கு எங்களுக்கு கிரையம் செய்த நபர்கள் விற்பனை செய்ய முயற்சித்தார்கள் என்றும் அதுபற்றி புருஷோத்தமனிடம் நமக்குள் ஆவணம் ஏற்படுத்தி கொள்ளலாம் என்று கேட்டு அவர் ஒத்துழைக்கவில்லை என்பதால் அந்த இடத்தை பொறுத்து எங்களுக்குள்

மேற்படி பாக பாத்திய அக்கு விடுதலை ஆவணம் ஏற்படுத்தி கொண்டோம். மேற்படி சர்வே எண்.419/2பி சம்மந்தமாக கிரைய ஆவணம் உள்ளதா என்றால் இல்லை. பட்டா ஆவணம் சந்திரப்பிள்ளை பெயரில் உள்ளது. ஏ அட்டவணை சொத்தான கீரநல்லூர் சொத்துக்களை நாங்கள் பார்த்து வருகிறோம் என்று சொன்னால் புருஷோத்தமன் மற்றும் நாங்கள் பார்த்து வருகிறோம்.

5) எனது முதல் விசாரணையில் பாரா-3ல் வாழும் இடத்திற்கு ஏற்ப வசதியின் காரணமாக வலத்தூர் கிராம நிலங்களை நாங்களும் கீரநல்லூர் கிராம நிலங்களை பிரதிவாதிகளும் பராமரித்து வருகிறோம் என்பதாக சொல்லி உள்ளோம் என்றால் சரிதான். மேற்படி ஏற்பாடு எந்த கால கட்டத்தில் இருந்து வருகிறது என்றால் எனது தாய் தந்தையர் இருந்தபோது அவர்கள் பார்த்துக்கொண்டார்கள். அவர்கள் இறப்பிற்கு பின்னர் நான் சென்னைக்கு சென்றுவிட்டேன். புருஷோத்தமனும் சென்னைக்கு சென்றுவிட்டார் என்பதால் வாய்மொழியாக வலத்தூர் இடங்களை நானும் கீரநல்லூர் இடங்களை புருஷோத்தமனும் பார்த்துக் கொள்வதாக பேசிக் கொண்டோம். வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு வரை சொத்தை அனுபவிப்பதில் எங்களுக்கும் பிரதிவாதிக்கும் பிரச்சினை இல்லை என்று சொன்னால் சரிதான். நான் வலத்தூர் இடங்களில் பயிர் வைத்து வரி செலுத்தி வந்தேனா என்றால் எனது தாயார் வரி செலுத்தி வந்தார். நான் எதுவும் வரி செலுத்தவில்லை. எனது தாயார் வலத்தூர் கிராம சொத்தில் பயிர் வைத்துள்ளாரா என்றால் வைத்துள்ளார். கீரநல்லூர் கிராமத்தில் புருஷோத்தமன் பயிர் வைத்து வந்தார் என்றால் சரிதான். நான் எனது போகத்தினை புருஷோத்தமனிடம் கேட்டதற்கு மறுத்துவிட்டார். எப்போது போகத்தினை கேட்டேன் என்றால் வழக்கு தாக்கல் செய்த பின்னர்தான் போகம் கேட்டேன். அட்டவணை ஏ மற்றும் பி சொத்துக்களை பொறுத்து எங்களுக்குள் வாய்மொழியாக பாகம் பிரித்துக் கொண்டோம் என்று சொன்னால் சரியல்ல. கிரைய ஆவணங்களின் அசல் புருஷோத்தமனிடம் உள்ளது என்றால் சரிதான். கூட்டு குடும்பமாக இருந்து வந்தபோது அவரது தலைமையில்தான் அனைவரும் இருந்தோம் என்பதால் ஆவணம் அவரிடம் உள்ளது. புருஷோத்தமனிடம் இருந்து அசல் ஆவணங்களை கேட்டு நாங்கள் அறிவிப்பு கொடுத்துள்ளோமா என்றால் இல்லை. வலத்தூர் கிராம சொத்துக்கள் சம்மந்தமான ஆவணங்களை புருஷோத்தமன் எங்களிடம் தருவதாக சொன்னார் என்றும், நாங்கள் அதை வாங்க மறுத்துவிட்டோம் என்று சொன்னால் சரியல்ல. அவ்வாறு நாங்கள் ஆவணம் பற்றி அவரிடம் கேட்கவில்லை.

குறுக்கு விசாரணை தொடர்ச்சி- வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க வேறு தேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.

Type written by the Typist in Open Court to my Dictation and to my hearing read over and typo graphed to the witness and acknowledged by him / her to be correct.

Sd/-A.Mohamed Ali,

Additional Subordinate Judge,
Kancheepuram.